**பாடம் 10**

# இரண்டு உடன்படிக்கைகள்



**மனன வசனம்**

**மேலான எருசலேமோ சுயாதீனமுள்ளவள், அவளே நம்மெல்லாருக்கும் தாயானவள். கலா 4:26.**

**ஆராய்ச்சிக்கு**

**கலா 4:21-31; ஆதி 1:28; ஆதி 2:2,3; ஆதி 3:15; ஆதி 15:1-6; யாத் 6:2-8; யாத் 19:3-6.**

ஆகஸ்ட் 26 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

பழைய ஏற்பாடு வழக்கற்றுப் போனதாகக் கருதும் கிறிஸ்தவர்கள், சீனாயில் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்திற்கும் சுவிசேஷத்திற்கும் சம்பந்தமில்லையென நினைக்கிறார்கள். சீனாயில் கொடுக்கப்பட்ட உடன்படிக்கையின் காலமானது, நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதை அடிப்படையாகக் கொண்டு இரட்சிப்பு அமைந்திருந்த ஒரு காலக்கட்டம் என்கிறார்கள். நியாயப்பிரமாணத்தின் நிபந்தனைகளுக்கு ஏற்றபடி மனிதர் வாழமுடியாததால், இயேசுகிறிஸ்துவின் புண்ணியங்களின்மூலம் கிடைக்கும் கிருபையின் உடன்படிக்கையான புதிய உடன்படிக்கையை தேவன் அறிமுகப்படுத்தியதாகக் கூறுகிறார்கள். 'பழைய உடன்படிக்கை நியாயப்பிரமாணத்தை அடிப்படையாகக் கொண்டது; புதிய உடன்படிக்கை கிருபையை அடிப்படையாகக் கொண்டது' என்பது அவர்களின் கருத்து.

இந்தக் கருத்துத் தவறானது. நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதை வைத்து, ஒருபோதும் இரட்சிப்பு கிடையாது. யூதமார்க்கமானது கிருபையை அடிப்படையாகக் கொண்ட ஒரு மதம்; வேதாகமத்தின் ஆரம்பம் முதலே இதைக் காணலாம். கலாத்தியர் கிரியைத் துவத்தை முக்கியப்படுத்தினார்கள்; அது கிறிஸ்துவத்திற்கு எதிரானது; பழைய ஏற்பாட்டிற்கும் எதிரானதுதான். இரண்டு உடன்படிக்கைகள் இரண்டு காலங்களுக்கானவை அல்ல; மனிதனின் மனநிலையைப் பிரதிபலிக்கின்றன; காயீன்-ஆபேல்போல் இரண்டு விதங்களில் தேவனோடு இடைபடுகிறவர்களைச் சுட்டிக்காட்டுகின்றன. காயீன்போல் தங்கள் செயலால் தேவனைப் பிரியப்படுத்த முயல்கிறவர்களை பழையஉடன்படிக்கைச் சுட்டிக்காட்டுகிறது. ஆபேல்போல், அவருடைய கிருபையை முற்றிலும் சார்ந்திருப்பவர்களை புதிய உடன்படிக்கைச் சுட்டிக்காட்டுகிறது.

2017, செப்டம்பர் 2 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## உடன்படிக்கையின் அடிப்படைகள்

கலா 4:21-31 இல், இஸ்ரவேலின் வரலாற்றைவைத்து பவுல் பேசுவதின் அர்த்தத்தைப் புரிந்துகொள்வது கடினமென்று பலர் நினைக்கிறார்கள். பழைய ஏற்பாட்டு நபர்களையும் நிகழ்வுகளையும்பற்றி நன்கு அறிந்திருந்தால்தான், அதற்கு அர்த்தங்காண்பது எளிது. உடன்படிக்கையை மையமாக வைத்து பவுல் பேசுகிறார். எனவே, பழைய ஏற்பாட்டில் உடன்படிக்கையின் அர்த்தம்பற்றி அறிந்தால் இதை அறிவது எளிது.

'உடன்படிக்கை' என்பதற்கான எபிரெய வார்த்தை பெரிட். முந்நூறு தடவைக்கு மேல் இந்த வார்த்தை பழைய ஏற்பாட்டில் வருகிறது. இதை 'ஒப்பந்தம்' எனலாம். கிழக்கத்திய நாடுகளில் இரு நபர்களுக்கு மத்தியிலும், இரு நாடுகளுக்கு மத்தியிலும் உறவுகளைச் சீர்ப்படுத்துவதில் உடன்படிக்கைகள் பெரும் பங்காற்றின. பொதுவாக, மிருகங்களை இரண்டாகத் துண்டிப்பது உடன்படிக்கை செயல்முறையில் ஒரு பகுதியாக இருந்தது. உடன்படிக்கையின் வாக்குறுதிகளையும் கடமைகளையும் மீறுவோருக்கு என்ன நேரிடும் என்பதைத்தான் மிருகங்களைக் கொல்லும் செயல்காட்டியது.

'ஆதாம்முதல் இயேசுவரை, மனிதரோடு தேவன் உடன்படிக்கைசெய்து வந்திருப்பதைத் காணலாம். ஒரு மீட்பரின் வருகையை அவை சுட்டிக்காட்டின; தாவீதுக்குக் கொடுக்கப்பட்ட உடன்படிக்கையில் அது நேரடியாகவே சொல்லப்பட்டது. ஆதி 12:2,3; 2 சாமு 7:12-17; ஏசா 11. தாவீதின் உடன்படிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட மேசியாவின் வருகையைக் குறிப்பிட்டு (எசே 36:26-28; 37:22-28) வல்லமையான ஒரு 'புதிய உடன்படிக்கையை' பாபிலோனியச் சிறையிருப்பிலிருந்த இஸ்ரவேலருக்கு தேவன் வாக்குத்தத்தம்பண்ணினார். (எரே 31:31- 34' - ஹன்ஸ் கே. லாராண்டெல்.

***பாவத்திற்குமுன் ஏதேன் தோட்டத்தில் ஆதாமோடு தேவன் பண்ணின உடன்படிக்கையின் அடிப்படை என்ன? ஆதி 1:28; 2:2,3,15-17.***

திருமணம், உடல் உழைப்பு, ஓய்வுநாள் ஆகியவை சிருஷ்டிப்பின் உடன்படிக்கையில் இடம்பெற்றிருந்தன. ஆனாலும், விலக்கப்பட்ட கனியைப் புசிக்கக்கூடாதென்பதுதான் உடன்படிக்கையின் முக்கியக்காரியமாக இருந்தது. 'கீழ்ப்படிந்தால் வாழ்வாய்' என்பது அந்த உடன்படிக்கையின் அடிப்படை. தேவ சித்தத்திற்கு இசைந்ததாக இயற்கை சிருஷ்டிக்கப்பட்டிருந்தது; எனவே இயலக்கூடிய ஒன்றைதான் தேவன் எதிர்பார்த்தார். கீழ்ப்படியும் மனப்பான்மை மனிதருக்கு இயற்கையாகவே உண்டு. ஆனால், இயற்கைக்கு மாறானதைச் செய்ய ஆதாமும் ஏவாளும் தீர்மானித்தார்கள். சிருஷ்டிப்பின் உடன்படிக்கையை மீறினார்கள். பாவத்தால் கறைபட்டபின்னர் மனிதன் கீழ்ப்படிய இயலாதவன் ஆனான். ஆதாமும் ஏவாளும் இழந்துபோன உறவை தேவன் மீண்டும் பெற்றுத்தர விரும்பினார். ஓர் இரட்சகரை வாக்களிக்கும் கிருபையின் உடன்படிக்கையைக் கொடுத்து, அதை நிறைவேற்றினார். ஆதி 3:15.

வேதாகமத்தின் முதல் சுவிசேஷ வாக்குத்தத்தம் ஆதி 3:15 இல் உள்ளது. கிறிஸ்துவுக்குள் நமக்குள்ள நம்பிக்கையைப்பற்றி அங்குச் சொல்லப்படுவது என்ன?

## ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம்

***ஆதி 12:1-5 இல் ஆபிரகாமோடு தேவன் செய்த உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்கள் யாவை? அதற்கு ஆபிரகாமின் பதில் என்ன?***

ஆபிரகாமுக்கு தேவன் முதலில் கொடுத்த வாக்குத்தத்தங்கள் தேவ கிருபைக்கு அத்தாட்சிகள். ஆபிரகாம் அல்ல; தேவன்தாம் அங்கு வாக்குத்தத்தம் செய்கிறார். தேவ தயவைப் பெறுவதற்கு ஆபிரகாமிடம் எந்தத் தகுதியும் இல்லை; ஆபிரகாமும் தேவனும் பேசி, முடிவெடுத்து, ஒப்பந்தம் செய்தார்களென்பதற்கு ஆதாரமும் இல்லை. தேவன்தாம் அனைத்தையும் வாக்குத்தத்தம்பண்ணுகிறார். தேவ வாக்குத்தத்தங்களை 'விசுவாசிப்பதற்கு' ஆபிரகாம் அழைக்கப்படுகிறார். 75 வது வயதில், தன் பெரிய குடும்பத்தை விட்டுவிட்டு, வாக்குத்தத்த தேசத்தை நோக்கிச்செல்வதில் அவர் விசுவாசத்தை வெளிப்படுத்த வேண்டியதிருந்தது.

"ஆபிரகாமுக்கும் அவர்மூலமாக சகல மனிதருக்கும் தேவன் ஆசீர்வாதத்தை வாக்களித்ததில், தம் மீட்பின் நோக்கத்தை சிருஷ்டிகர் மீண்டும் எடுத்துரைத்தார். ஏதேனில் ஆதாமையும் ஏவாளையும் அவர் 'ஆசீர்வதித்தார். ஆதி 1:28; 5:2. பிறகு, ஜலப்பிரளயத்திற்குப்பின், நோவாவையும் அவன் குமாரரையும் ஆசீர்வதித்தார். ஆதி 9:1. மனித இனத்தை மீட்கவும் தீமையை அழிக்கவும், இழந்த பரதீசை மீண்டும் பெற்றுத்தரவும் ஒரு மீட்பர் வருவாரென்று தேவன் முன்பு செய்த வாக்குத்தத்தத்தை இதன்மூலம் தேவன் தெளிவுப்படுத்தினார். ஆதி 3:15. இப்பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து மக்களையும் தாம் ஆசீர்வதிப்பதாக தேவன் உறுதிப்படுத்தினார்." - ஹன்ஸ் கே. லாராண்டெல்.

***வாக்குத்தத்த மகன் பிறப்பதற்குப் பத்து வருடங்கள் காத்திருந்தார் ஆபிரகாம். அப்போது, தேவ வாக்குத்தத்தம்பற்றி என்னென்ன கேள்விகள் அவருக்கு எழுந்திருக்கக்கூடும்? ஆதி 15:1-6.***

சந்தேகம் எதுவும் இல்லாமல் ஆபிராம் தேவனை விசுவாசித்ததாக புகழாரம் சூட்டுவது எளிது; ஆனால், வேதாகமம் வேறுவிதமாகச் சொல்கிறது. ஆபிரகாம் விசுவாசித்தார்; ஆனால், அவருக்கும் கேள்விகள் இருந்தன. அவர் விசுவாசம் வளருகின்ற ஒரு விசுவாசமாக இருந்தது. மாற்கு 9:24 இல் சொல்லப்படும் தகப்பன்போல, 'விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி செய்யும்' என்றுதான் ஆதி 15:8 இல் கூறுகிறார். உடனே, தேவனும் வழக்கத்தின்படி ஆபிரகாமோடு உடன்படிக்கைசெய்து, தம் கிருபையால் வாக்குத்தத்தத்தை உறுதிப்படுத்துகிறார். ஆதி 15:7-18. தேவன் உடன்படிக்கை செய்தது அல்ல; அதில் எவ்வளவு தூரம் ஆண்டவர் இறங்கிவந்தார் என்பதுதான் மிகவும் ஆச்சரியமானது. முற்கால கிழக்கத்திய நாடுகளின் அரசர்கள் தங்கள் வேலைக்காரரோடு உடன்படிக்கை செய்துகொள்வதில்லை. ஆனால், தேவனோ ஆபிரகாமுக்கு வாக்குறுதி கொடுத்தார்; அதற்கு அடையாளமாக, கொல்லப்பட்ட மிருகங்களின் துண்டங்கள் நடுவே கடந்துசென்று, தம் ஜீவனையே சாட்சியாக வைத்தார். இயேசு தம் ஜீவனைக் கல்வாரியில் பலியாக்கி, தம் வாக்குத்தத்தத்தை நிஜமாக்கினார்.

உங்கள் வாழ்க்கையில் நடவாததுபோல் தோன்றும் என்ன காரியங்களில் இப்போது நீங்கள் நம்பிக்கையும் விசுவாசமும் வைக்கவேண்டியிருக்கிறது? மனந்தளராமல் தொடர்ந்து விசுவாச வாழ்க்கை வாழ்வதற்கு நீங்கள் என்ன செய்யலாம்?

## ஆபிரகாம், சாராள், ஆகார்

***ஆகாரின் சம்பவம் நடந்திருக்கக்கூடாத ஒன்றுபோல் பவுல் பேசுவது ஏன்? கலா 4:21-31; ஆதி 16. இந்தச் சம்பவத்தை வைத்து, இரட்சிப்புப்பற்றி புவல் வலியுறுத்தும் கருத்து என்ன?***

---

தேவ வாக்குத்தத்தத்தை விசுவாசிக்க ஆபிரகாம் தவறியதற்கும் ஆகாரின் சம்பவத்திற்கும் தொடர்புண்டு. ஆபிரகாமின் வீட்டிலிருந்த ஓர் எகிப்திய அடிமை தான் ஆகார். தேவ வாக்குத்தத்தத்தை முதலாந்தரம் ஆபிரகாம் சந்தேகித்தபோது, சாராளைப் பார்வோன் எடுத்துக்கொள்கிறான். ஆதி 12:11-16. சாராளுக்குப் பதில் அநேகப் பரிசுப்பொருட்களை ஆபிரகாமுக்குக் கொடுக்கிறான். அவற்றோடு சேர்ந்து வந்தவளாகத்தான் ஆகார் இருக்கவேண்டும்.

வாக்குத்தத்த மகன் பிறப்பானென்று தேவன் சொல்லி பத்துவருடங்கள் கடந்துவிட்டன; ஆபிரகாமும் சாராளும் பிள்ளையில்லாதிருந்தார்கள்; தேவனுக்கு உதவிசெய்ய எண்ணினார்கள்; ஆகாரை ஆபிரகாமுக்கு மறுமனையாட்டியாகக் கொடுத்தாள் சாராள். இன்று நமக்கு அது தவறாகத் தெரிந்தாலும், சாராளின் காலத்தில் அது சாமர்த்தியமானது. முற்காலக் கலாச்சாரத்தில், தன் எஜமானிக்குப் பிள்ளையில்லாதபட்சத்தில் அவள் வேலைக்காரி அவளுக்காக பிள்ளைபெறலாம். எனவே, தன் கணவனுக்கும் ஆகாருக்கும் பிறக்கிற குழந்தை தனக்குச் சொந்தமானதென்று சாராள் எண்ணியிருக்கலாம். அவள் திட்டப்படி குழந்தை பிறந்தது; ஆனால், அது தேவன் வாக்குப்பண்ணின குழந்தை அல்ல.

தேவனை அதிகம் நம்பின ஒரு மனிதன்கூட, தன் விசுவாசத்தில் தவறிவிட வாய்ப்புள்ளதென்று இச்சம்பவம் காட்டுகிறது. இஸ்மவேலைத் தன் சுதந்தரவாளியாக அங்கீகரிக்கும்படி, ஆதி 17:18,19 இல் தேவனிடம் மன்றாடுகிறார் ஆபிரகாம்; ஆனால், ஆண்டவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இஸ்மவேலின் பிறப்பில் ஓர் 'அற்புதம்' என்னவென்றால், தன் கணவனை இன்னொரு பெண்ணுக்கும் உரியவனாக்க சாராள் சம்மதித்ததுதான். மற்றப்படி, ஆகாருக்கு ஒரு குழந்தை பிறந்ததில் அதிசயம் எதுவுமில்லை; அது 'மாம்சத்தின்படி' பிறந்த குழந்தை. தேவன் தனக்கு வாக்குக்கொடுத்ததை ஆபிரகாம் நம்பியிருந்தால், இது எதுவுமே நிகழ்ந்திருக்காது: எவ்வளவோ வேதனைகளைத் தவிர்த்திருக்கலாம்.

***இஸ்மவேலின் பிறப்பிற்கு மாறாக, ஈசாக்கினுடைய பிறப்பில் சம்பந்தப்பட்டிருந்த சூழ்நிலைகளைக் கவனியுங்கள். ஆதி 17:15-19;18:10-13; எபி 11:11,12. அந்தச் சூழ்நிலைகளின் மத்தியில் ஆபிரகாமும் சாராளும் அதிக விசுவாசத்தை வெளிப்படுத்த வேண்டியதிருந்தது ஏன்?***

---

தேவ வாக்குத்தத்தங்களை நீங்கள் விசுவாசிக்கத் தவறியபோது, எவ்விதங்களிலெல்லாம் வேதனை ஏற்பட்டது? என்ன நேரிட்டாலும், தேவன் சொல்வதை அப்படியே நம்புவதற்கு இந்த அனுபவத்திலிருந்து நீங்கள் கற்றுக்கொண்டது என்ன? தேவ வாக்குத்தத்தங்களை நீங்கள் அதிகம் நம்பும்படி நீங்கள் என்ன தீர்மானங்களைச் செய்யலாம்?

***சீனாயில் எப்படிப்பட்ட உடன்படிக்கை உறவை தேவன் தம் மக்களோடு ஏற்படுத்த விரும்பினார்? ஆபிரகாமோடு தேவன் செய்த உடன்படிக்கைக்கும் இதற்கும் உள்ள ஒற்றுமைகள் யாவை? யாத் 6:2-8;19:3-6; உபா 32:10-12.***

ஆபிரகாமோடு ஏற்படுத்தின அதே உடன்படிக்கை உறவை இஸ்ரவேல் மக்களோடும் ஏற்படுத்த தேவன் விரும்பினார். ஆதி 12:1-3. ஆபிரகாமிடம் தேவன் பேசின வார்த்தைகளுக்கும், யாத் 19 இல் மோசேயிடம் அவர் பேசின வார்த்தைகளுக்கும் ஒற்றுமைகள் உண்டு. தாம் தம்முடைய மக்களுக்குச் செய்ய இருந்ததை இரண்டு தருணங்களிலும் தேவன் வலியுறுத்தினார். இன்னென்னதை செய்தால் இஸ்ரவேலரை தாம் ஆசீர்வதிப்பதாக தேவன் கூறவில்லை; மாறாக, தேவ ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கு இஸ்ரவேலர் கீழ்ப்படிய வேண்டியிருந்தது. யாத் 19:5 இல், 'கைக்கொள்' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் எபிரெய வார்த்தைக்கும் 'கேட்டு' என்றுதான் அர்த்தம். கிரியைகளினால் நீதிகிடைப்பதாக தேவ வார்த்தை சொல்லவே இல்லை. மாறாக, தேவவாக்குத்தத்தங்களில் பலசமயங்களில் ஆபிரகாம் காட்டிய அதே விசுவாசத்தைத்தான் இஸ்ரவேலரிடமும் தேவன் வேண்டினார்.

***ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட உடன்படிக்கையும், சீனாயில் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட உடன்படிக்கையும் ஒன்றுதான் என்றால், ஆகாரின் சம்பவத்தையும் சீனாய் மலையையும் அவர் ஒப்பிடுவது ஏன்? யாத் 19:7-25; எபி 8:6,7.***

மனித இனத்தின் பாவ நிலையையும், தேவனுடைய பூரண கிருபை அதைக் குணப்படுத்துவதையும் ஆசரிப்புக்கூடார ஆராதனைகள்மூலம் சுட்டிக்காட்டவே சீனாயில் உடன்படிக்கை கொடுக்கப்பட்டது. சீனாயின் உடன்படிக்கையில் தவறியது தேவன் அல்ல; மக்கள்தாம் தங்கள் வாக்குறுதிகளில் தவறினார்கள். எபி 8:6. தாழ்மையோடும் விசுவாசத்தோடும் தேவ வாக்குத்தத்தங்களை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, சுயத்தை நம்பினார்கள். 'கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம்' என்றார்கள். யாத் 19:8. நானூறு வருடங்களுக்குமேல் எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்ததால், தேவனுடைய மகத்துவம்பற்றின மெய்யறிவு அவர்களிடம் இல்லை; தாங்கள் எவ்வளவு பாவிகளெனும் உணர்வுமில்லை. தேவனுடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதற்கு அவருக்கு உதவிசெய்ய விரும்பின ஆபிரகாம்-சாராள்போல, கிருபையாக தேவன் கொடுத்த உடன்படிக்கையைக் கிரியையின் உடன்படிக்கையாக மாற்ற முயன்றார்கள் இஸ்ரவேலர். இதினிமித்தமே ஆகாரைச் சீனாய் என்கிறார். மனிதர் கிரியைகளினால் இரட்சிப்பைப்பெற முயல்வதை இரண்டுமே சுட்டிக்காட்டுகிறது.

சீனாயில் கொடுக்கப்பட்ட பிரமாணம் தீமையானதென்றோ, ஒழிந்துபோனதாகவோ பவுல் சொல்லவில்லை. தேவனைப் பிரியப்படுத்த சுயகிரியைகளைச் சார்ந்திருக்கலாமெனும் முடிவுக்கு வருமளவிற்கு நியாயப்பிரமாணத்தை அவர்கள் முக்கியப்படுத்தியதுதான் தவறு. எனவே, நியாயப்பிரமாணத்தை கைக்கொண்டு தேவனை பிரியப்படுத்த முடியாது என்று உணர்வதற்கு பதிலாக, சுயநீதிக்காரர்களானார்கள். கிருபையினால் கிறிஸ்துவிடம் வழிநடத்தப்படுவதற்கு நியாயப்பிரமாணம் தடையாக நின்றது; கிறிஸ்துவிடமிருந்து விலக்கியது.

## இன்றைய இஸ்மவேலும் ஈசாக்கும்

ஆபிரகாமின் மெய்ச்சந்ததியார் தாங்கள்தாம் என்றும், எருசலேம் தங்கள் தாய் என்றும் பவுலின் எதிரிகள் சொல்லிவந்தார்கள். அதனை மறுக்கவே இஸ்ரவேலின் வரலாற்றைச் சொல்கிறார் பவுல். 'புறஜாதியார் புறம்பானவர்கள்' என்றும், 'அவர்கள் கிறிஸ்துவின் உண்மைச் சீடர்களாய் மாற விரும்பினால், முதலில் விருத்தசேதனப் பிரமாணத்திற்குக் கட்டுப்பட்டு, ஆபிரகாமின் பிள்ளைகளாக வேண்டும்' என்றும் சொன்னார்கள்.

ஆனால், பவுல் சொல்லும் உண்மை இதற்கு முற்றிலும் மாறானது. இந்தக் கிரியைத்துவக்காரர்கள் ஆபிரகாமின் புத்திரர்கள் அல்லர்; இஸ்மவேல்போல் முறைகேடாய் உண்டானவர்கள். விருத்தசேதனத்தில் நம்பிக்கைவைப்பதால், இவர்கள் மாம்சத்தைச் சார்ந்திருந்தார்கள். ஆனால், விசுவாசிகளான புறஜாதியார், மாம்சத்தின்படி பிறவாவிட்டாலும் ஈசாக்கைப்போல் அற்புதமான முறையில் ஆபிரகாமின் புத்திரராகப் பிறந்தவர்கள். "ஈசாக்கைப்போல் அவர்களும் ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலாக இருந்தார்கள்; ஈசாக்கைப் போல், தேவகிருபையின் விளைவால்தான் அவர்களும் சுதந்தரரானார்கள்; உடன்படிக்கையின் வாக்குத்தத்தத்திற்கு உரியவர்களானார்கள்." - ஜேம்ஸ் டி.ஜி. டன்.

***ஆபிரகாமின் மெய்ச்சந்ததியார் இவ்வுலகில் எதைச் சந்திக்க நேரிடும்? கலா 4:28-31; ஆதி 21: 8-12.***

வாக்குத்தத்தப் பிள்ளை என்பதால் ஈசாக்கிற்கு ஆசீர்வாதம் மாத்திரம் கிடைக்கவில்லை; உபத்திரவமும் கிடைத்தது. ஆதி 21:8-10 இல், ஈசாக்குக்காக ஆபிரகாம் விருந்துபண்ணின நாளில், இஸ்மவேல் அவனைப் பரியாசம்பண்ணுகிறான். அதை மனதில் வைத்தே ஈசாக்குக்கு உபத்திரவம் ஏற்பட்டதாகக் கூறுகிறார் பவுல். ஆதி 21:9 இல், ஈசாக்கைப் பார்த்து இஸ்மவேல் 'சிரித்தது' போல் மூலமொழியில் உள்ளது. ஆனால் சாராள் நடந்துகொண்டதிலிருந்து, ஈசாக்கை இஸ்மவேல் ஏளனமாகப் பேசியிருக்க வேண்டுமென்று தெரிகிறது. இஸ்மவேல் காரணத்தோடு அவ்வாறு நடந்துகொண்டது இன்று நமக்குப் புரியாமல் இருக்கலாம். ஆனால், 'பிறப்புரிமை யாருக்கு?' எனும் கேள்வி அந்தக் குடும்பத்தில் நிலவியது; எனவேதான், இஸ்மவேலிடம் பகை உணர்வு உண்டானது. முற்கால அரசர்கள் பலர் தங்கள் பதவியைக் காப்பாற்றுவதற்குத் தங்கள் சகோதரர்கள் உட்பட, தங்கள் எதிரிகள் அனைவரையும் அழித்துவிடுவார்கள். நியா 9:1-6. ஈசாக்கு எதிர்ப்பைச் சந்தித்தாலும், தன் தகப்பனின் சுதந்தரவாளியாக சகல சிலாக்கியங்களையும் அன்பையும் பாதுகாப்பையும் தயவையும் பெற்று அனுபவித்தார்.

ஈசாக்கின் ஆவிக்குரிய சந்ததியாரான நாம், எதிர்ப்பையும் இன்னல்களையும் சந்திக்கும் போது திகைக்கக்கூடாது; சபைக் குடும்பத்தாரிடமிருந்துகூட அப்படிப்பட்ட அனுபவம் நமக்கு ஏற்படலாம். உங்கள் விசுவாசத்தின்நிமித்தம் என்னென்ன வழிகளில் உங்களுக்கு நெருக்கமானவர்கள்கூட உங்களை உபத்திரவப்படுத்தி இருக்கிறார்கள்? அல்லது, பிறர் விசுவாசத்தின்நிமித்தம் நீங்கள் அவர்களை உபத்திரவப்படுத்தினதுண்டா?

"ஆபிரகாம் உடன்படிக்கையில் மீட்பின் வாக்குத்தத்தம் உள்ளதே! சீனாயில் ஏன் இன்னொரு உடன்படிக்கை? அடிமைத்தனத்திலிருந்த மக்கள் தேவனையும் ஆபிரகாமினுடைய உடன்படிக்கையின் நியதிகளையும் பெருமளவில் மறந்திருந்தார்கள்.

"தேவன் அவர்களைச் சீனாய்க்குக் கொண்டுவந்தார்; அங்கு தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார். கீழ்ப்படிதலை நிபந்தனையாக வைத்து, மாபெரும் ஆசீர்வாதங்கள் அடங்கிய வாக்குத்தத்தத்தையும் நியாயப்பிரமாணத்தையும் கொடுத்தார். 'நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள்' என்றார். யாத் 19:5,6. மக்கள் தங்கள் பாவ நிலையையும், கிறிஸ்து இல்லாமல், தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள இயலாதென்பதையும் உணரவில்லை. சில வாரங்கள்தாம் கடந்தன; அந்த உடன்படிக்கையை மீறினார்கள்; வார்ப்பிக்கப்பட்ட சொரூபத்தை வணங்கும்படி பணிந்தார்கள். தாங்கள் கீழ்ப்படியத் தவறின ஓர் உடன்படிக்கையை வைத்து தேவதயவைப் பெற இயலாது; தங்கள் பாவநிலையையும் தாங்கள் மன்னிக்கப்பட வேண்டியதின் அவசியத்தையும் கண்டார்கள். ஆசரிப்புக்கூடார பலிமுறைகள் சுட்டிக்காட்டியதும், ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட உடன்படிக்கை வெளிப்படுத்தினதுமான இரட்சகர் தங்களுக்குத் தேவையென்பதை அப்போதுதான் உணர்ந்தார்கள். பாவ அடிமைத்தனத்திலிருந்து தேவனே தங்களை விடுவிக்கமுடியுமென்று, அவர்மேல் அன்பும் விசுவாசமும் வைத்து, அவரோடு கட்டப்பட்டார்கள். புது உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை உணர இப்போது ஆயத்தமானார்கள்" – *PP, p 371,372.*

# கலந்துரையாடக் கேள்விகள்

1. *தேவனோடுஉங்களுக்குள்ள அனுபவம் பழைய உடன்படிக்கையின்படி உள்ளதா? அல்லது, புதிய உடன்படிக்கையின்படி உள்ளதா? இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?*

2. *உங்கள் சபைக் குடும்பத்தில் இறுக்கமான சூழலை ஏற்படுத்தி வரும் பிரச்சனைகள் யாவை? அவற்றிற்கு எவ்வாறு தீர்வு காணலாம்? மத் 18:15-17.*

3. *'இவற்றை இனி செய்யமாட்டேன்' என்று ஆண்டவரிடம் வாக்குக்கொடுத்துவிட்டு, பின்னர் அதை மீறினதுண்டா? கிருபைபற்றி புரிகிறதா?*

**பாடச்சுருக்கம்:** *'தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற நம் சொந்த முயற்சிகளைச் சார்ந்திருப்பது வீண்' என்பதை ஆகார், இஸ்மவேல், சீனாயில் இஸ்ரவேலர் ஆகியோரின் நடவடிக்கைகள் எடுத்துரைக்கின்றன. இப்படிப்பட்ட சுயநீதிதான் பழைய உடன்படிக்கை. புதிய உடன்படிக்கையோ கிருபையின் உடன்படிக்கை. முதலில் அது ஆதாம்-ஏவாளோடு ஏற்படுத்தப்பட்டது. பிறகு, ஆபிரகாமோடு புதுப்பிக்கப்பட்டது. பின்னர், கிறிஸ்துவில் அது நிறைவேறியது.*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,
டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,
15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.
அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.